Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 101

சனிக்கிழமை
07 மார்ச் 2026

மாசி 23 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## கட்டுத்துவக்கு வெடித்து இளைஞர் படுகாயம்!

யாழ்ப்பாணம், மார்ச் 7
கிளிநொச்சி மல்லாவி பகுதியில், கட்டுத்துவக்கு வெடித்ததில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். மல்லாவி வடகாடு பகுதியைச் சேர்ந்த இளைஞரே »11

பாலைதீவுத் திருவிழாவுக்குச் சென்றபோது

# கவிழ்ந்தது படகு இருவர் உயிரிழப்பு!!

- யாழ். குருநகர் கடற்பரப்பில் நேற்றுத் துயரம்
- மேலும் இருவருக்கு தீவிர சிகிச்சை
- பத்துப்பேர் மருத்துவமனையில்!

யாழ்ப்பாணம், மார்ச் 7
பாலைதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழாவுக்காகப் பக்தர்களை ஏற்றிச் சென்ற படகொன்று யாழ்ப்பாணம் – குருநகர் கடற்பரப்பில் நேற்றுக் காலை திடீரெனக் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் இருவர் கடலில் மூழ்கி உயிரிழந்தனர். இந்த விபத்தில் மீட்கப்பட்டவர்களில் இருவர் அதிதீவிர சிகிச்சைக்கும், பத்துப் பேர் மருத்துவக் கண்காணிப்புக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர். அத்தோடு இன்னும் சிலர் கடலில் காணாமற்போயிருக்கலாம் என்றும் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. »11



குருநகர்ப் படகு விபத்து;

## முழுமையான விசாரணைக்கு கடற்றொழில் அமைச்சர் உத்தரவு

யாழ்ப்பாணம், மார்ச் 7
குருநகர்க் கடற்பரப்பில் இடம்பெற்ற படகு விபத்துத் தொடர்பில் முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு, விபத்துக்கான »11

பதுக்கும் நோக்கில் கடத்தப்பட்ட

## 500 லீற்றர் ம.எண்ணெய் பருத்தித்துறையில் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7
யாழ்ப்பாணம் – பருத்தித்துறைப் பகுதியில் பதுக்கலுக்காகக் கடத்தப்பட்ட 500 லீற்றருக்கு மேற்பட்ட மண்ணெண்ணெய் பருத்தித்துறை பொலிஸாரால் »11

## மேலும் ஒரு மாதத்துக்கு நாட்டில் அவசரநிலைமை

நாடாளுமன்றம் அனுமதி

கொழும்பு, மார்ச் 7
அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பது தொடர்பில், நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை நேற்று நிறைவேற்றப் பட்டது. »11

## அடக்குமுறைகளை ஏவவே அவசரகாலச் சட்டம் நீடிப்பு

எதிர்க்கட்சி போர்க்கொடி

கொழும்பு, மார்ச் 7
அரசாங்கத்துக்கு எதிரானவர்கள் மீது அடக்குமுறையை ஏவுவதற்கே அவசரகாலச்சட்டம் நீடிக்கப்பட்டுள்ளது என்று. »11




காணாமலாக்கப்பட்ட லலித், குகன் வழக்கு

## கோத்தாபயவின் சாட்சியம்; ஏப்ரல் 28ஆம் திகதி கட்டளை!

யாழ்ப்பாணம், மார்ச் 7
காணாமல் ஆக்கப்பட்ட லலித் மற்றும் குகன் ஆகியோர் தொடர்பான வழக்கில், கோத்தாபய ராஜபக்சவின் சாட்சியத்தை எத்தகைய முறையில் பெறுவது »11

## இஸ்ரேலுக்கு எதிராக கொழும்பில் பேரணி!

கொழும்பு, மார்ச் 7
மத்திய கிழக்கில் உருவாகியுள்ள போர்ச் சூழல் முடிவுக்கு வரவேண்டும் என்று வலியுறுத்தியும், அமெரிக்க – இஸ்ரேல் கூட்டுப் »11


மன்னார்

## சாந்திபுரத்தில் திருட்டு; நான்கு பெண்கள் கைது

நகைகள், பணம் மீட்பு

மன்னார், மார்ச் 7
மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாந்திபுரம் 50 வீட்டுத்திட்டப் பகுதியில் உள்ள வீடொன்றில் கடந்த புதன் கிழமை இடம்பெற்ற திருட்டுக்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 4 பெண்கள் கைது செய்யப்பட்டனர். »11

தேசியப் பாதுகாப்புக்கு

## காணி விடுவிப்பால் அச்சுறுத்தலில்லை!

பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7
இராணுவக் கட்டுப்பாட்டின் கீழிருந்த காணிகள் விடுவிக்கப்படுவதால் தேசியப் பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை என்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் »11

## இசைப்பிரியாவின் மாமனார் மறைவு



யாழ்ப்பாணம், மார்ச் 7
தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தளபதி சிறிராமின் தந்தையும், இறுதிப்போரில் சிறிலங்காப் படைகளால் கொடூரமாகக் கொல்லப்பட்டவரான இசைப்பிரியாவின். »10


வடக்கின் போரில்

## சென்.ஜோன்ஸ் ஆதிக்கநிலை!

யாழ்ப்பாணம், மார்ச் 7
யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான வடக்கின்போர் »11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி: 06.03.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 4367
ஆங்கில எழுத்து: E
வெற்றி இலக்கங்கள்: 21 44 64 70
விசேட எழுத்து: E

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி: 06.03.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 1434
வெற்றி இலக்கினம்: ரிஷபம்
வெற்றி இலக்கங்கள்: 12 22 44 58

**NLB ஜய**
திகதி: 06.03.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 0393
ஆங்கில எழுத்து: T
வெற்றி இலக்கங்கள்: 6 9 7 4

**மெகா பவர்**
திகதி: 06.03.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 2473
ஆங்கில எழுத்து: K
சுப்பர் இலக்கம்: 22
வெற்றி இலக்கங்கள்: 23 35 37 63

**மஹஜன சம்பத**
திகதி: 06.03.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 6125
ஆங்கில எழுத்து: E
வெற்றி இலக்கங்கள்: 4 7 1 6 5 1

**தன நிதானய**
திகதி: 06.03.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 2155
ஆங்கில எழுத்து: C
வெற்றி இலக்கங்கள்: 24 56 79 80
விசேட எழுத்து: C

**சுப தவசக்**
திகதி: 06.03.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 0241
வெற்றி இலக்கினம்: துலாம்
வெற்றி இலக்கங்கள்: 08 39 57

# ஏழைகளைப் பாதுகாக்கத் தவறிய நுண்கடன் ஒழுங்குமுறைச் சட்டம்

## டிரான்ஸ்பேரன்சி நிறுவனம் அதிருப்தி

கொழும்பு, மார்ச் 7

**கடுமையான ஒழுங்குமுறைத் தோல்விகளைச் சரிசெய்து, பாதிக்கப்படக்கூடிய கடன் பெறுபவர்களைப் பாதுகாக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட நுண்கடன் ஒழுங்குமுறைச்சட்டம், நலிவடைந்த சமூகத்தினரையும், வாழ்வாதாரத்துக்காகக் கடனை நம்பியிருக்கும் பெண்களையும் பாதுகாக்கத் தவறியுள்ளது என்று டிரான்ஸ் பேரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.**

இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

அரசியலமைப்பு முரண்பாடுகளைச் சரிசெய்து, கடன் பெறுபவர்களைச் சுரண்டலில் இருந்து பாதுகாக்கும் என எதிர்பார்க்கப்பட்ட இந்தச் சட்டம், மாறாகப் பெரிய நிறுவனங்களுக்குச் சாதகமான ஓட்டைகளைக் கொண்டுள்ளன.

புதிய சட்டத்தின்படி, ஒரு கடன் 'சமூக வலுவூட்டலை' நோக்கமாகக் கொண்டிருந்தால் மட்டுமே அது நுண்கடனாகக் கருதப்படும். பெரிய வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள், தாங்கள் வழங்கும் சிறு கடன்களை 'வணிக நோக்கம்' என்று கூறிக்கொள்வதன் மூலம், இந்தச் சட்டத்தின் கடுமையான ஒழுங்குமுறைகளில் இருந்து தப்பித்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

வருமானத்துக்கும் கடனுக்கும் இடையிலான விகித வரம்புகள் கட்டாயமாக்கப்படவில்லை.

ஒழுங்குமுறை முடிவுகளுக்கு எதிராக மேன்முறையீடு செய்யத் தெளிவான வழிமுறை இல்லை. சட்டப் பிரதிநிதித்துவத்தைப் பெறுவதற்கான வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

நுண்கடன் துறையில் நிலவும் மிரட்டல், கட்டாய அறவீடு மற்றும் பெண் கடன் பெறுபவர்களுக்கு எதிரான பாலியல் இலஞ்சம் போன்ற கொடிய குற்றங்களை ஒழுங்குமுறை மீறல்களாகக் கருதவோ, அவற்றுக்குக் கடுமையான தடைகளை விதிக்கவோ இந்தச் சட்டம் தவறியுள்ளது.

நிதி ஆதாரங்கள் மற்றும் மானியங்கள் தொடர்பான தகவல்கள் தெளிவாக இல்லை. பொறுப்புக்கூறல் பாதுகாப்புகள் இன்றி தன்னிச்சையான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நலிவடைந்த சமூகத்தினரைப் பாதுகாப்பதாக அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது- என்றுள்ளது. (ச-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி: 06.03.2026
தினம்: வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம்: 0833
ஆங்கில எழுத்து: M
வெற்றி இலக்கம்: 5 6 8 7 3 7

**Super Ball**
திகதி: 06.03.2026
தினம்: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு வாரம்: 3099
ஆங்கில எழுத்து: C
வெற்றி இலக்கம்: 38 64 70 74

**சனிதா**
திகதி: 06.03.2026
தினம்: வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து: C
வெற்றி இலக்கம்: 17 45 66 73
வெற்றி வாரம்: 5260

**SASIRI**
திகதி: 06.03.2026
தினம்: வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம்: 0929
வெற்றி இலக்கம்: 12 28 45

**லக்ன ராசி**
திகதி: 06.03.2026
தினம்: வெள்ளிக்கிழமை
மிதுனம்
வெற்றி இலக்கம்: 09 21 23 43
சீட்டிழுப்பு வாரம்: 4811

**KAPRUKA**
திகதி: 06.03.2026
தினம்: வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து: C
சுப்பர் இலக்கம்: 30
வெற்றி இலக்கம்: 08 31 44 70
வெற்றி வாரம்: 2275

**அத கோடிபதி**
திகதி: 06.03.2026
தினம்: வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து: V
வெற்றி இலக்கம்: 38 39 60 76
வெற்றி வாரம்: 2925

# வெப்பம் அதிகரிப்பு



கொழும்பு, மார்ச் 7

நாட்டின் சில பகுதிகளில் வெப்பமான வானிலை அதிகரிக்கக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

சப்ரகமுவ மாகாணம் மற்றும் குருணாகல், கம்பஹா, மொனராகலை ஆகிய மாவட்டங்களில், மனித உடலில் உணரப்படும் வெப்பத்தின் அளவான எச்சரிக்கை மட்டம் உயர வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெப்பமான சூழலில் பொதுமக்கள் பாதுகாப்புடன் இருக்க சில அத்தியாவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ச-இ)

# கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் அல்லைப்பிட்டியில் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 7

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்லைப்பிட்டி 2ஆம் வட்டாரப் பகுதியில், கேரளக் கஞ்சாவுடன் நபர் ஒருவரை ஊர்காவற்றுறைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸார் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, வீதியில் சென்ற நபர் ஒருவர் பொலிஸ் வாகனத்தைக் கண்டதும் பதற்றமடைந்து ஓடத் தொடங்கியுள்ளார். சந்தேகமடைந்த பொலிஸார் அவரைத் துரத்திச் சென்று மடக்கிப் பிடித்து சோதனையிட்டபோது அவரிடமிருந்து 2 கிராம் 500 மில்லிகிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

தொடர்ந்து சந்தேகநபரின் வீட்டுக்கு மோப்பநாயுடன் சென்று சோதனை செய்தபோது வீட்டுக்குள்ளும் மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட கஞ்சா மற்றும் சான்றுப்பொருள்களுடன் சந்தேகநபரை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-23)



# பெற்றோலைப் பதுக்கியவர் ஊர்காவற்றுறையில் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 7

ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேலணை 6ஆம் வட்டாரப் பகுதியில் 60 லீற்றர் பெற்றோலை விற்பனை செய்யும் நோக்கத்துடன் வைத்திருந்த நபர் ஒருவர் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். சட்டவிரோத எரிபொருள் விற்பனை நடைபெறுவதாகக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, ஊர்காவற்றுறைப் பொலிஸார், குறித்த நபரிடம் பெற்றோல் வாங்குவது போல் சென்று சந்தேகநபரை கையும்மெய்யுமாகப் பிடித்தனர். இதன்போது விற்பனைக்காகச் சேமித்து வைக்கப்பட்டிருந்த 60 லீற்றர் பெற்றோல் கைப்பற்றப்பட்டது. சந்தேகநபரையும் சான்றுப்பொருள்களையும் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸாரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-23)

# லிட்ரோ விலையில் மாற்றமில்லை

கொழும்பு, மார்ச் 7

மார்ச் மாதத்துக்கான உள்நாட்டு எரிவாயு விலையில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படமாட்டாது என லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட விலையின் அடிப்படையில் சந்தையில் எரிவாயு சிலிண்டர்கள் விற்பனை செய்யப்படும். சந்தையில் தட்டுப்பாடின்றி எரிவாயுவை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக 7,800 மெற்றிக் தொன் எரிவாயு ஏற்கனவே நாட்டிற்கு வந்தடைந்துள்ளது. எஞ்சிய 30,200 மெற்றிக் தொன் எரிவாயுவை ஏற்றிய கப்பல் தற்போது மாலைதீவுக் கடற்பரப்பில் தயார் நிலையில் உள்ளது.

இதன் மூலம் எதிர்வரும் பண்டிகைக் காலங்களில் எரிவாயுத் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை என நிறுவனம் தெரிவித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கிழக்குப் போரால் தேயிலை ஏற்றுமதி சரிவு

கொழும்பு, மார்ச் 7

**மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் தீவிரமடைந்து வரும் போர்ப் பதற்றம், இலங்கையின் முதுகெலும்பாக விளங்கும் தேயிலைத்துறையில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏற்றுமதி முடக்கம் காரணமாக தேயிலைக் கொழுந்துகளின் விலையும் வீழ்ச்சியடைந்துள்ளது.**

இதுதொடர்பில் தேசிய தேயிலை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் சமன் கீகனகே தெரிவிக்கையில்,

இலங்கையின் மொத்த தேயிலை உற்பத்தியில் சுமார் 52 சதவீதமானவை மத்திய கிழக்கு மற்றும் தென்னாபிரிக்க நாடுகளுக்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

நாட்டின் வருடாந்த உற்பத்தியான 256,000 மெற்றிக் தொன்களில், சுமார் 128,000 மெற்றிக் தொன் தேயிலையை குறித்த நாடுகளால் தற்போது கொள்வனவு செய்ய முடியவில்லை.

தேயிலை உற்பத்தியில் 65 சதவீதப் பங்களிப்பை வழங்கும் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள், இந்த விலை வீழ்ச்சியால் நேரடிப் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்- என்றார்.

இதுதொடர்பில் பெருந்தோட்ட மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் கே.வி. சமந்த வித்யாரத்ன தெரிவிக்கையில், இது அரசாங்கத்தின் தவறல்ல, உலகளாவிய போர்ச் சூழலால் உருவான தற்செயலான பாதிப்பு. எனவே, விவசாயிகள் எக்காரணம் கொண்டும் உற்பத்தியைக் குறைக்கவேண்டாம்.

சந்தைப்படுத்த முடியாத தேயிலை இருப்புகளைப் பாதுகாப்பாகச் சேமித்துவைக்குமாறு தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் போர் மேகங்கள் கலைந்து சந்தை நிலைமை சீரடையும் போது, சேமித்து வைக்கப்பட்டுள்ள தேயிலையைச் சிறந்த விலைக்கு விற்பனை செய்ய முடியும் - என்றார். (ச-இ)

## லொறி விபத்தில் சிறுவர்கள் பலி!

புத்தளம், மார்ச் 7

சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இரண்டு சிறுவர்கள் மீது லொறி மோதியதில் சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் புத்தளம் கிளிமடுச் சேனைப் பகுதியில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

8 மற்றும் 13 வயதுடைய இரண்டு சிறுவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். குருங்கன்வெட்டிய நோக்கிப் பயணித்த லொறி, எதிர்த் திசையில் இருந்துவந்த இரு சிறுவர்கள் பயணித்த சைக்கிளுடன் மோதியுள்ளது. இதில் இரண்டு சிறுவர்களும் பலத்த காயமடைந்த நிலையில் புத்தளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## போதைப்பொருள்களுடன் கைதானவர்களுக்கு மறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 7

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில், கடந்த சில நாள்களாக பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, பல வகை போதைப்பொருள்களுடன் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கசிப்பு, கஞ்சா மற்றும் ஹெரோய்ன் உள்ளிட்ட போதைபொருள்களுடன் 10 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள், மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (க-27)

## போலி உறுதிப்பத்திரம் தயாரிப்பு; சட்டத்தரணிக்குக் கடூழியச் சிறை



கொழும்பு, மார்ச் 7

போலி உறுதிப்பத்திரங்களைத் தயாரித்த குற்றச்சாட்டில் குற்றவாளியாகக் காணப்பட்ட பெண் சட்டத்தரணி ஒருவருக்குக் கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் 12 வருட சிறைத்தண்டனை விதித்துள்ளது.

நீண்ட வழக்கு விசாரணையின் பின்னர் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி லங்கா ஜயரத்ன இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

பொரளைப் பிரதேசத்தில் உள்ள காணியொன்றுக்குப் போலி உறுதிப்பத்திரம் தயாரித்தமை உள்ளிட்ட இரண்டு குற்றச்சாட்டுகளின் கீழ் இந்தப் பிரதிவாதியான சட்டத்தரணிக்கு எதிராகச் சட்டமா அதிபரால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இரண்டு குற்றச்சாட்டுகளையும் நியாயமான சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்ட நிலையில் ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் 6 வருடங்கள் வீதம் இரண்டு குற்றச்சாட்டுகளுக்கும் 12 வருடங்கள் சிறைத்தண்டனை விதிப்பதாக நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டார். (ச-இ)

## மின்சாரசபை மறுசீரமைப்பு வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, மார்ச் 7

இலங்கை மின்சாரசபையின் பணிகள் மற்றும் கடமைகளை மறுசீரமைத்து எரிசக்தி அமைச்சர் குமார ஜயகொடியால் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் 9ஆம் திகதி முதல் நடைமுறைக்குவரும் வகையில் வெளியிடப்பட்டுள்ளது.

வர்த்தமானியின்படி, மின் உற்பத்தி, கடத்தல், விநியோகம் மற்றும் அமைப்பு இயக்கங்களுக்காக ஆறு புதிய நிறுவனங்களை நிறுவுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி, 2024ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரசபைச் சட்டத்தின் பல உப பிரிவுகள் திருத்தம் செய்யப்பட்டு வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. (ச-இ)




## பேரெடுத்தலும் பெற்றோலும்

எரியிற வீட்டில பிடுங்கினது லாபம் எண்டு சிலபேர் இருப்பினம். அதைமாதிரி எரியிற வீட்டுக்கு நாலைஞ்சு வாளி தண்ணியை ஊத்திப்போட்டு, நான்தான் நெருப்பை நூர்த்தனானெண்டு படம் காட்டுறவையும் இருப்பினம். இதுவும் ஒருவகை லாபம்தான். செத்தவீட்டில மற்றவை பாக்கோணுமெண்டு முன்னுக்கு ஓடியாடி சிலர் வேலை செய்வினம். 'அவனைப்பார், தன்ர வீட்டுக் காரியம் மாதிரி எப்பிடி ஓடியோடிச் செய்யிறான்' எண்டு நாலுபேர் புளுகிறதைக் கேட்டு சந்தோசப்படுற ஆக்கள் கனபேர் இருக்கினம். அதைமாதிரி ஊரில ஏதும் சிக்கல் நடக்கேக்க நாட்டாமை செய்து தங்களுக்குத் தாங்களே தலைப்பாகை கட்டிக்கொள்றவையால, சனத்துக்கு இன்னும் நெருக்கடிதான் வருமே தவிர உருப்படியா ஒண்டும் நடக்காது.

பெற்றோல் தட்டுப்பாடு எண்டு சனம் முழுக்க எல்லா வேலையளையும் விட்டிட்டு பெற்றோல் செற்றே கதியெண்டு பெரிய கியூவில நிண்டவை. உண்மையில பெற்றோலுக்கு இன்னும் இலங்கையில தட்டுப்பாடு வரேலை. அப்பிடித் தட்டுப்பாடு வரமுதலே பெற்றோலைத் தேவையானளவுக்கு (கனபேர் தேவைக்கும் கூடின அளவில) அடிக்க வெளிக்கிட்டால யாழ்ப்பாணத்தில உள்ள பெற்றோல் செற்றுகளில வந்த உடனேயே பெற்றோல் எல்லாம் முடியத் தொடங்கினது. பெற்றோலுக்குமட்டுமில்லை மண்ணெய் ணய்க்கும் தட்டுப்பாடு. அதால எல்லா செற்காரரும் வழக்கத்தை விட கூடுதலா மண்ணெண்ணெய்க்கும் பெற்றோலுக்கும் ஓர்டர் போட்டவை. அந்த ஓர்டர்படி பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் உடனுக்குடன எரிபொருளை அனுப்பிக் கொண்டிருந்தது.இது செற்காரருக்கும், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கும் இடைப்பட்ட விசயம். ஆனால் சனத்துக்கு நன்மை செய்யிறன் எண்டு இதுக்குள்ள கச்சேரிக்காரர் மூக்கை நுழைச்சதால தேவையில்லாத அலைச்சல் சனத்துக்குத்தான்.

இந்தநெருக்கடியிலபெற்றோல்,மண்ணெண்ணெய் விசயத்தை நாங்கள் தான் தீர்த்துவைச்சம் எண்டு காட்டுறதுக்காக, செற்காரர் என்னென்ன எரிபொருள், எவ்வளவு தேவை எண்டு ஓர்டர் போட்டிருக்கினம் எண்ட லிஸ்டை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திட்ட கச்சேரிக்காரர் வாங்கியிருக்கினம். அந்த ஓர்டர் லிஸ்டை வைச்சுக்கொண்டு 'நாளைக்கு இந்த செற்களில பெற்றோல் குடுபடுகுது, அந்த செற்றில மண்ணெண்ணெய் குடுபடுகுது' எண்டு மீடியாக்களுக்கு அறிவிச்சிருக்கினம். கச்சேரிக்காரர் சொன்னதை நம்பி, அவை சொன்ன செற்றுகளுக்கு முன்னால சனம் வாகனங்களோடையும், மண்ணெண்ணெய்க் கானோடையும் கால்கடுக்க வெயிலுக்க நிண்டதுதான் மிச்சம். அங்க பெற்றோலும் வரேலை, மண்ணெண்ணெயும் வரேலை. முந்திரிக்கொட்டைத்தனமா எல்லாத்தையும் முந்திக்கொண்டு அறிவிச்சு, நல்லபேரெடுக்க வெளிக்கிட்ட கச்சேரிக்காரருக்கு ஒரு விசயம்தெரியாமல்போட்டுது.அதென்னவெண்டால், செற்காரர் ஓர்டர் போட்ட அடுத்தநாளே இஞ்ச அந்த எரிபொருள் வந்துசேராது. ரண்டு, மூண்டு நாளாகும். அதாலதான் இவையள் அறிவிச்சபடி குறிப்பிட்ட செற்களுக்குப் பெற்றோலோ மண்ணெண்ணெயோ கச்சேரிக்காரர் சொன்ன திகதியில வரேலை. தாங்கள் பேரெடுக்க வெளிக்கிட்டு, கடைசியாக் கச்சேரிக்காரர் சனத்தைக் கஷ்டப்படுத்தினதுதான் மிச்சம் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், மார்ச் 7

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் துறைசார் வளவாளர், பயிற்சிநெறியாளர், கட்டுரையாளர், ஆய்வியலாளர் மற்றும் நடுவர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்து சமய அறநெறிப்பாடசாலைச் சமூகத்துக்கு ஆக்கத்திறன் ஆளுமைகளை வளர்ப்பதற்கான பேச்சாற்றல், எழுத்தாற்றல், கதாப்பிரசங்கம், புராணபடனம், வில்லிசை, நாடகம், சொல்லாடல், பண்ணிசை, நடனம், யோகாசனம் முதலான பயிற்சிகளை வழங்கக்கூடியவர்கள், அறநெறி மாணவர்களுக்கான ஆக்கத்திறன், ஆளுமை வெளிக்கொணர்வுப் போட்டிகளுக்கான நடுவர்கள் மற்றும் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படுகின்ற கருத்தரங்குகள், ஆய்வரங்குகள், பயிலரங்குகள், வதிவிடப் பயிற்சிகள், தலைமைத்துவப் பயிற்சி வழிகாட்டல்களை முன்னெடுக்கக் கூடிய துறைசார் வல்லுநர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர், தமது சுய விபரக் கோவையை 'Department of Hindu Religious and Cultural Affairs, 4th Floor, 180, T.B.Jaya Mawatha, Colombo 10' எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில், தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் 'துறைசார் வளவாளர் விண்ணப்பம் கோரல் 2026' எனக் குறிப்பிட்டு, எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (க-இ)



இஸ்லாமியர்களின் புனித மாதமான ரம்ழான் மாதத்தில் நோற்கப்படும் நோன்பு கடந்த மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாகியது. அதை முன்னிட்டு மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்களால் நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றது. (எ-41-159)

## பாவிகளின் புகலிடம் இறையிரக்கம்

செல்வந்தர் ஒருவருக்கு இரு மகன்கள். இளையவன் தனக்குரிய சொத்தை வாங்கிக்கொண்டு தொலைவிடத்துக்குச் சென்றான். அங்கு தாறுமாறாக வாழ்ந்து அனைத்தையும் இழந்து உணவுக்கு வழியின்றி அறிவு தெளிந்தவனாக 'என் தந்தையிடம் போவேன்' எனத் திருந்தி வந்தான். தந்தை ஓடிச்சென்று அவனை வரவேற்று விருந்து கொண்டாடினார். நிபந்தனையற்ற மன்னிப்பை வழங்கி 'இறந்து போயிருந்தான், மீண்டும் உயிர்பெற்று வந்துள்ளான். காணாமற்போயிருந்தான் மீண்டும் கிடைத்துள்ளான்' என மகிழ்ந்தார். அண்ணனோ ஏற்கமுடியாதவனாக ஒதுங்கி நின்றான். இறைவனின் இரக்கத்தை இதைவிடச் சித்திரித்த உவமைக் கதை எதுவுமில்லை.

இறைவனை 'ஊதாரித் தந்தை' என்று வர்ணிக்கும் அளவுக்கு இறையிரக்கம் உயர்ந்தது. அன்பு நிறைந்த இறை தந்தை எம் மனமாற்றத்துக்காகக் காத்திருக்கின்றார். பாவ வழியில் தொலைந்துபோன நாம் மனம்வருந்தி திரும்பி வரும்போது புதிய அடையாளங்களைத் தந்து தன் பிள்ளைகளாக ஏற்றுக்கொள்வதில் மகிழ்கின்றார். கடவுள் மட்டும் மனிதர்கள் புரியும் குற்றங்களுக்கு உரிய தண்டனை வழங்கினால் இவ்வுலகில் யாரும் நிலைத்திருக்க முடியாது. அவர் மன்னிப்பு அளித்து இரக்கம் காட்டுவதாலேயே மனிதர்கள் தொடர்ந்தும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஒரு பாவி மனம் திரும்பி வரும்போது விண்ணகத்தில் பெருமகிழ்வு உண்டாகும். இயேசு ஆண்டவர் எம்மை மிகுதியாய் மன்னிக்கும்போது நாம் பிறரை மன்னிப்பது தான் முறையாகும். மனம்மாறி தன்னிலை உணர்ந்து வருபவர்களை மனதார ஏற்று மகிழ்வோம். தவறியோரின் மனமாற்றத்துக்காக காத்திருப்போம்.

**எஸ்.யேசுதாஸ்**
**கொழும்புத்துறை**



# யாழ்.பழைய சோனகத்தெரு வீதி விளக்குகள் திருத்தம்

யாழ்ப்பாணம்,மார்ச் 7

நோன்புக்காலத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணம் பழைய சோனக தெரு 13ஆம் வட்டார வீதிகளின் மின்விளக்குகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன. மாநகரசபை உறுப்பினர்களின் கோரிக்கைக்கமைவாக வீதி மின்விளக்குகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

இரவுநேரத் தொழுகைகளை முன்னிட்டு பள்ளிவாசல் முன்றல், பள்ளிவாசல் வரையான முக்கியமான வீதிகள், உள் ஒழுங்கைகள், பிரதான வீதி என பிரதானமான இடங்களில் மின்விளக்குகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன. (க)

# சலங்கை நாதம் நிகழ்வு

கிளிநொச்சி, மார்ச் 7

கங்கைத் தமிழ் மன்றத்தின் சலங்கை நாதம் நிகழ்வு கிளி/பளை மத்திய கல்லூரியின் ஆருக்ஷ கிருத்திக் கலையரங்கத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலாளர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முன்னிலை அதிதியாக ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாகீர்த்தி ஸ்ரீமதி சாந்தினி சிவனேசனும், சிறப்பு அதிதியாக வெளிவிவகார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் இ.கோகுலரங்கனும், மதிப்புறு அதிதிகளாக பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபைத் தவிசாளர் சு.சுரேன், கிளிநொச்சி வடக்கு கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.பத்மகாந்தன், கிளிநொச்சி மாவட்டச் செயலக சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி மாலினி கிருஸ்னானந்தன், கிளிநொச்சி பளை மத்திய கல்லூரி அதிபர் கு. இரவீந்திரா, ரீச்சா பார்க் அன் ரிசோட் தலைவர் க.பாஸ்கரன், முத்துமாரி ஹாட்வெயார் உரிமையாளர் சு.யசிந்தன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ-41-159)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும். வாகனத்தில் செல்லும்போது கவனமாகச் செல்லவும். உறவினர்கள் வகையில் தேவையற்ற பிரச்சினை ஏற்படக்கூடும்.

**இடபம்** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். தேவையான பணம் கிடைக்கும். உறவினர்கள் சிலர் உங்கள் யோசனையைக் கேட்டு வருவார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** ஆனால்,குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம். உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் அவர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கடகம்:** சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாகமுடியும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படக்கூடும். குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் சந்தர்ப்பம் கூடிவரும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். குடும்பத்தில் சிறுசிறு சலசலப்பு ஏற்பட்டாலும், சமயோசிதமாக சமாளித்து விடுவீர்கள். தேவையான பணம் கையில் இருந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தொடங்கும் காரியம் அனுகூலமாக முடியும். உற்சாகமாகச் செயற்படுவீர்கள். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**துலாம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். எதிரிகளால் மறைமுக ஆதாயம் உண்டாகும். அரசாங்கக் காரியம் அனுகூலமாகமுடியும்.

**விருச்சிகம்:** பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால், உணவு விஷயத்தில் கவனம் தேவை.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மகரம்:** எதிர்பார்த்த பணம் கைக்குக் கிடைக்கும். வீட்டில் உள்ளவர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுச் செயற்படுவார்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும்.

**மீனம்:** உற்சாகமான நாள். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




## கொலைக்களமும் ஐ.நா.வும்...!

இஸ்ரேலுக்கு எதிரான போரில், பேரழிவுகளை ஏற்படுத்தவல்ல கொத்துக்குண்டுகளை ஈரான் பயன்படுத்தியுள்ளது எனக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. ஈரானில் உள்ள சிவிலியன் இலக்குகள் மற்றும் பாடசாலைகள் மீது இஸ்ரேல் மேற்கொண்ட உக்கிரத் தாக்குதல்களுக்குப் பதிலடியாகவே, இஸ்ரேலின் அயன்டோம் ஏவுகணைத் தடுப்புச் சாதனத்தால் அவ்வளவு இலகுவில் இடைமறித்து அழிக்க முடியாத கொத்துக் குண்டுகளைக் கையிலெடுத்திருக்கின்றது ஈரான். காஸாவிலும், ஈரானிலும் இஸ்ரேல் செய்த - செய்கின்ற - செய்யப்போகின்ற அக்கிரமங்களுக்கு முன்னால், கொத்துக்குண்டுகளெல்லாம் ஒரு விடயமே இல்லை என்ற பொதுவான விவாதமும் எழவே செய்திருக்கின்றது. எது - எவ்வாறு இருப்பினும், கொத்துக்குண்டுப் பாவனை போர் நெறிமுறைக்குப் புறம்பானது. அதை யார் கையிலெடுத்தாலும் அதற்கு எதிராகக் குரல்கொடுப்பதில் இரண்டாவது கருத்து இருக்கக்கூடாது.

அதேநேரம், ஈரானின் கொத்துக்குண்டுப் பாவனை இன்னொரு செய்தியையும் உலகத்துக்கு வலுவாகச் சொல்லியுள்ளது. அதாவது, இலங்கையில் இடம்பெற்ற இறுதிப்போரின்போது சர்வதேச நியமங்களுக்கு முரணாக இலங்கை அரசாங்கத்துக்கு ஈரான் கொத்துக்குண்டுகளை வழங்கியது என்ற குற்றச்சாட்டு நீண்டகாலமாக உள்ளது. இதுதொடர்பான விவாதங்கள் தற்போதுவரை தொடர்ச்சியாகவே இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை வரை சென்ற இந்த விடயத்தை இலங்கை அரசாங்கம் மீண்டும் மீண்டும் நிராகரித்தே வருகின்றது. இவ்வாறிருக்கையில், ஈரானிடம் கொத்துக்குண்டுகள் உள்ளன என்பதற்கும், அவை இலங்கைக்கும் வழங்கப்பட்டிருக்கலாம் என்பதற்குமான விசாரணைப் புள்ளிகளைத் தற்போதைய தாக்குதல் அகலத் திறந்துவிட்டிருக்கின்றது. இலங்கையில் மட்டுமல்ல, சிரிய அதிபர் அல் அசாத்தின் ஆதரவுப் படைகளால், அவருக்கு எதிரான உள்நாட்டுக் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராகவும் கொத்துக்குண்டுகள் பயன்படுத்தப்பட்டன. அவற்றையும் ஈரானே வழங்கியிருக்கலாம் என்றும் பொதுவாகக் கருதப்படுகின்றது. இவ்வாறான நிலையில், இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் தீவிரமான விசாரணைகள் இடம்பெறவேண்டியது அவசியம்.

*123 நாடுகளால் முற்றாகத் தடைசெய்யப்பட்ட கொத்துக்குண்டுகள் ஈரானிடமும் ரஷ்யாவிடமும் அமெரிக்காவிடமும் தாராளமாகவே இருக்கின்றன என்றால், அவை எந்தெந்தக் களங்களில் பயன்படுத்தப்பட்டன? அவற்றின் போரியல் இலக்கு என்ன? என அறியப்படவேண்டியது அவசியம். ஈழத் தமிழர்கள் மட்டுமல்ல, சிரியர்கள், குர்திஷ்கள் எனப் பல்வேறு இனக் குழுமங்கள் இந்தக் கொத்துக்குண்டுகளால் பெரும் இனப்படுகொலைகளையும் அவலச் சாவுகளையும் எதிர்கொண்டு நீதிக்காகக் காத்திருக்கின்றன. உலக அரசாங்கம் என்று தன்னை அழைத்துக்கொள்ளும் ஐ.நா. போரின் பின்னரான நியாயம் தேடலுக்கும் நிலைமாறுகால நீதி தொடர்பிலும் வலியுறுத்துவதைவிட, போரியல் விதிமுறைகளில் இறுக்கமாக நிற்பதும், போர்க்களத்தைக் கட்டுப்படுத்துவதும் அவசியம். ஆனால், அதற்குரிய துணிவும் முதுகெலும்புத்தனமும் ஐ.நா.வுக்கு இல்லை என்பது காஸாவில் வெளிப்பட்டாயிற்று. மத்திய கிழக்குப் பிராந்தியங்கள் இதன் அடுத்தடுத்த காட்சிகள். அவ்வளவே.*



### பொய்யாமொழி

**அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்**
**சிறுகை அளாவிய கூழ்**

**பொருள்:** தம்முடைய மக்களின் சிறு கைகளால் அளாவப் பெற்ற உணவு, பெற்றோர்க்கு அமிழ்தத்தைவிட மிக்க இனிமை உடையதாகும்.




## சம்பள ஆணைக்குழு நிறுவ அரசு திட்டம்

**கொழும்பு, மார்ச் 7**
**அதிபர் சேவை மற்றும் அரசசேவையின் பல துறைகளில் நிலவும் சம்பள முரண்பாடுகளுக்குத் தீர்வு காண்பதற்காக, இந்த ஆண்டில் சம்பள ஆணைக்குழு ஒன்று நிறுவப்படும் எனப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர், இந்த ஆணைக்குழு ஊடாக அரச சேவையின் சம்பள முரண்பாடுகளுக்கு நிரந்தரத் தீர்வை வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் குறிப்பிட்டுள்ளார்.
அதிபர் சேவையில் உள்ள சம்பள முரண்பாடுகள் தொடர்பாக அதிபர் சங்கங்கள் மற்றும் அதிபர்களுடன் நாம் நீண்ட கலந்துரையாடல்களை நடத்தியுள்ளோம்.
இந்த முரண்பாடு தொடர்பாகத் தொடர்ந்து ஆராய்ந்து ஒரு தீர்வைப் பெறுவதற்கு நாம் முயற்சித்து வருகிறோம். கடந்த காலங்களில் சம்பள உயர்வுகள் வழங்கப்பட்ட விதம் காரணமாக, கல்வித் துறையில் மட்டுமன்றி பல துறைகளிலும் நெருக்கடிகளும் முரண்பாடுகளும் ஏற்பட்டுள்ளன. அரசாங்கத்தின் கொள்கையின்படி, இந்த ஆண்டு சம்பள ஆணைக் குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளது. அதன் மூலமாகவே எம்மால் நிலையான தீர்வை வழங்கமுடியும்-என்றார். (எ-இ)



## சிறுமி துஷ்பிரயோகம்; 10 வருட கடூழிய சிறை

மட்டக்களப்பு, மார்ச் 7
மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் 14 வயது சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த 55 வயதுடைய ஒருவருக்கு 10 வருட கடூழிய சிறைத்தண்டனையும் 25 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் செலுத்துமாறு மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
கடந்த 2014ஆம் ஆண்டு பாலியல் துஷ்பிரயேதகம் செய்த குற்றச்சாட்டில் குறித்த சிறுமியின் உறவினரான நபரொருவர் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு பின்னர் நீதிமன்றப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.
இந்த வழக்கு மட்டக் களப்பு மேல் நீதிமன்றத்தில் தொடர்ந்து இடம்பெற்றுவந்த நிலையில் குறித்த வழக்கு அண்மையில்விசாரணைக்கு எடுத்துக்கொண்டபோதுகுறித்த நபர் ஆவணங்கள் மற்றும் சாட்சிகள் மூலம் குற்றவாளியாகக் கண்டறியப்பட்டதையடுத்து அவருக்கு 10 வருட கடூழியச் சிறை விதிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## புதுடில்லி புறப்பட்ட அமைச்சர் விஜித

கொழும்பு, மார்ச்7
இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியத் தலைநகர் புதுடில்லிக்குச் சென்றுள்ளார்.
இந்தியாவில் ஆண்டுதோறும் நடைபெறும் புகழ்பெற்ற புவிசார் அரசியல் மாநாடான 'ரைசினா' கலந்துரையாடலில் பங்கேற்றுள்ளார். மத்திய கிழக்கு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுடன் அவர் ஏற்கனவே தொலைபேசி ஊடாகக் கலந்துரையாடியுள்ள நிலையில், இம்மாநாட்டின் இடைவேளையின் போது பல நாட்டுத் தலைவர்களை நேரில் சந்தித்து இலங்கையின் பாதுகாப்பு மற்றும் இராஜதந்திர உறவுகள் குறித்துப் பேசத் திட்டமிட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## 11 கிலோ போதைப்பொருளுடன் கட்டுநாயக்கவில் ஒருவர் கைது

கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் சுமார் 11 கிலோகிராம் குஷ் மற்றும் ஹஷீஸ் போதைப்பொருள்களுடன் சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். விமானநிலைய வருகை முனையத்தில், பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின் போதே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. இதன்போது, சந்தேகநபரிடமிருந்து, 6 கிலோகிராம் 590 கிராம் குஷ் ரக போதைப்பொருள் மற்றும் 4 கிலோகிராம் 910 கிராம் ஹஷீஸ் ரக போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. (ச-இ)

## கொழும்பு–லண்டனுக்கு கூடுதல் விமானசேவை

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் கொழும்புக்கும் லண்டனுக்கும் இடையே நாளை 8ஆம் திகதி கூடுதல் விமானத்தை இயக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவித்துள்ளது. மத்திய கிழக்கில் தற்போதைய நெருக்கடி சூழ்நிலை காரணமாக விமானங்கள் இரத்துச் செய்யப்பட்டதால் சிரமத்துக்குள்ளான பயணிகளுக்கு உதவ இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தெரிவித்துள்ளது. பயண இடையூறுகளைச் சந்தித்தவர்களுக்கு உதவ தேர்ந்தெடுக்கப்பட்ட வழித்தடங்களில் கூடுதல் விமானங்களை இயக்கத் திட்டமிட்டுள்ளது என்றும் விமான நிறுவனம் தெரிவித்துள்ளது. (ச-இ)

நாளை
ஞாயிற்றுக்கிழமை - மாசி 24
08.03.2026
சுபநேரம் : 09.24 - 10.54
ராகுகாலம் : 04.54 - 06.24




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் கால்நடைகள் பாதிப்பு; 900 மில்லியன் ரூபா இழப்பீடு!



## கால்நடை வளப் பிரதியமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 7**

**வடக்கு மாகாணத்தில் ஏற்பட்ட காலநிலை மாறுபாட்டு அனர்த்தங்களால் உயிரிழுந்த கால் நடைகளுக்காகப் பண்ணையாளர்களை வலுப்படுத்த 900.49 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரதி அமைச்சர் நாமால் கருணாரத்ன நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற அமர்வில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.**

அவர் மேலும் தெரிவித்தாவது-

அனர்த்தங்களில் பாதிக்கப்பட்ட கால்நடைப் பண்ணைகளில் உயிரிழந்த கால்நடைகளின் எண்ணிக்கையை கணக்கெடுத்து பதிவுசெய்யப்பட்ட பண்ணையாளர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படும். அதன்படி கலப்பின மாடுகளுக்காக இறந்த மாடொன்றுக்கு 2 இலட்சம் ரூபா என்ற அடிப்படையில் 10 மாடுகள் வரையில் 20 இலட்சம் ரூபா நிதி வழங்கப்படும்.

அத்துடன் உள்ளூர் மாடுகளுக்காக இறந்த மாடொன்றுக்கு 50 ஆயிரம் ரூபா என்ற அடிப்படையில் 20 மாடுகள் வரையில் 10 இலட்சம் ரூபா நிதி வழங்கப்படுகின்றது.

அத்துடன் பலவீனமான நிலையில் உள்ள எஞ்சிய மாடுகளுக்கென சிகிச்சை வழங்குவதற்காக 25 மில்லியன் ரூபா பெறுமதியான மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

அதேபோன்று டித்வா புயல் உள்ளிட்ட அனர்த்தங்களால் வடக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட 4749 ஆட்டுப் பட்டிகளுக்காக 280 இலட்சம் ரூபா பெறுமதியான 266,650 கிலோகிராம் உணவுகள் இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளன.

இதன்படி யாழ்ப்பாணத்தில் 1600 பட்டிகளுக்கும், கிளிநொச்சியில் 838 பட்டிகளுக்கும், முல்லைத்தீவில் 764 பட்டிகளுக்கும், மன்னாரில் 1009 பட்டிகளுக்கும், வவுனியாவில் 539 பட்டிகளுக்குமென இந்த உணவு வகைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன -என்றார். (ச-இ)

# வடக்கில் கால்நடைகள் பேரழிவு; 150 மில். ரூபா இழப்பு வேண்டும்

## உடனடி இழப்பீடு வழங்குமாறு செல்வம் எம்.பி. வலியுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 7

வடக்கு மாகாணத்தில் நிலவும் கடும் குளிர் மற்றும் தொடர் மழையால் வாழ்வாதாரத்தை இழந்துள்ள கால்நடைப் பண்ணையாளர்களுக்கு அரசாங்கம் உடனடியாக இழப்பீடு வழங்காவிட்டால், வடக்கின் கிராமியப் பொருளாதாரம் முற்றாக அழிந்துவிடும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

நாடு பயிர்ச்சேதங்கள் குறித்துப் பேசிக்கொண்டிருக்கும் வேளையில், வடக்கின் கால்நடை விவசாயத்தின் மீது ஒரு 'மௌனப் பேரழிவு' தாக்கியுள்ளது.

உயிரிழந்த மாடுகள், எருமைகள் மற்றும் ஆடுகளின் நேரடிப் பெறுமதி சுமார் 150 மில்லியன் ரூபாவுக்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

திடீர் வெப்பநிலை குறைவு மற்றும் தொடர்ச்சியான மழை காரணமாக, 48 மணிநேரத்திற்குள் ஆயிரக்கணக்கான கால்நடைகளும் ஆடுகள் மற்றும் கோழிகள் உயிரிழந்துள்ளன. இது வெறும் விலங்குகளின் இழப்பு மட்டுமல்ல, ஆயிரக்கணக்கான குடும்பங்களின் கிராமியப் பொருளாதாரத்தின் முழுமையான வீழ்ச்சியாகும்.

கடும் குளிரைத் தாங்கக்கூடிய முறையான தொழுவங்கள் மற்றும் தங்குமிட வசதிகள் மேய்ச்சல் நிலங்கள் இல்லாததே பெரிய உயிர்ச் சேதத்துக்குக் காரணமாகும். எனவே அரசு பாதிக்கப்பட்ட பண்ணையாளர்களுக்கு, உயிரிழந்த ஒவ்வொரு கால்நடைக்கும் உடனடியாக நிதி உதவி வழங்கவேண்டும். எதிர்காலத்தில் இவ்வாறான காலநிலை மாற்றங்களிலிருந்து கால்நடைகளைப் பாதுகாக்க, அரசாங்க மானியத்துடன் கூடிய தொழுவங்களை அமைத்துக் கொடுக்கவேண்டும்- என்றார். (ச-இ)

# போரை நிறுத்துங்கள் அமைதிக்கு திரும்புங்கள்

## ஈரானிய அமைச்சரிடம் விஜித ஹேரத் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 7

உலகளாவிய அமைதியை உறுதிப்படுத்த அனைத்துத் தரப்பினரும் இராஜதந்திர ரீதியாகச் செயற்பட வேண்டும் என இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் வலியுறுத்தியுள்ளார்.

ஈரானிய வெளிவிவகார அமைச்சர் செய்யெத் அப்பாஸ் அரக்ச்சியுடன் அவசர தொலைபேசி உரையாடலை மேற்கொண்டு இதனைத் தெரிவித்துள்ளார்.

அதிகரித்துவரும் பகைமை மற்றும் இராணுவத் தாக்குதல்கள் குறித்துத் தனது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்திய அமைச்சர் விஜித ஹேரத், "மோதல்களைக் கைவிட்டு, இராஜதந்திரப் பேச்சுவார்த்தைகள் ஊடாக அமைதிக்குத் திரும்புங்கள்" என ஈரானிய அமைச்சரிடம் வலியுறுத்தினார்.

பிராந்தியத்தில் நிலவும் நெருக்கடிகளுக்குத் துப்பாக்கி ரவைகளால் தீர்வுகாண முடியாது. உலகளாவிய அமைதியை உறுதிப்படுத்த அனைத்துத் தரப்பினரும் இராஜதந்திர ரீதியாகச் செயற்படவேண்டியது அவசியம்.

மத்திய கிழக்கு போர்ச் சூழலானது எரிபொருள் விநியோகம் மற்றும் சர்வதேச கடல்வழி வர்த்தகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், ஒரு நடுநிலை நாடாக இலங்கை இந்த அமைதி முன்னெடுப்பை மேற்கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



# தவிசாளரின் கடமைக்கு இடையூறு: சந்தேகநபருக்கு 14 நாள்கள் மறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 7

வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் கைதான சந்தேகநபருக்கு 14 நாள்கள் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கட்டப்பிராயில் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் அனுமதியற்ற சட்டவிரோதக் கட்டடத்தை இடித்து அழிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த, வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷை, வேறு பிரதேசத்தில் இருந்து வருகைதந்த ஒருவர் பொதுமக்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் முன்னிலையில் மரியாதைக் குறைவாக எச்சரித்திருந்ததுடன், கடமைக்கு இடையூறாகச் செயற்பட்டுள்ளார். சந்தேகநபருக்கு எதிராக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தவிசாளர் வாக்குமூலமளித்திருந்தார். இந்தநிலையில் தவிசாளரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமைக்காகக் கைதுசெய்யப்பட்டவரை, எதிர்வரும் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு, யாழ்ப்பாணம் மேலதிக நீதிமன்று உத்தரவிட்டது. (க)

# அமெரிக்காவைக் கண்டிக்க அரசாங்கத்துக்கு அச்சம்!

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 7

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் மேற்கொண்டுவரும் கூட்டு நடவடிக்கைகளை - ஈரான் மீது தாக்குதல் நடத்தி அதன் ஆன்மிகத் தலைவரைக் கொலை செய்த அமெரிக்காவைக் கண்டிப்பதற்கு ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் அச்சப்படுவதையிட்டு முஸ்லிம் சமூகம் கவலையடைகிறது என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் உதுமாலெப்பை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்கா தனது இலக்குகளை அடைந்துகொள்வதற்காக ஜனநாயக நாடுகள் மீது தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது. அதனடிப்படையிலேயே ஈரான் மீதும் தாக்குதல் நடத்தி, அதன் ஆன்மிகத் தலைவரைக் கொலை செய்திருக்கிறது. அமெரிக்காவின் இந்த நடவடிக்கையை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். அமெரிக்கா இதற்கு முன்னர் வெனிசுலாவில் அத்துமீறித் தலையிட்டு, அந்நாட்டு ஜனாதிபதியைக் கைதுசெய்து, அமெரிக்காவில் வைத்திருக்கிறது. இது எந்த வகையில் நியாயமாகும்.

மத்திய கிழக்கில் பணிபுரிந்து வரும் 10 இலட்சத்துக்கும் அதிகமான எமது இலங்கையர்களின் தொழில் கேள்விக்குறியாகி இருக்கிறது.

ஆனால் இந்த விடயங்கள் தொடர்பில் கதைப்பதற்கு ஆளும் தரப்பினர் அச்சப்படுகின்றனர். அமெரிக்கா, இஸ்ரேல் தொடர்பில் கதைப்பதாக இருந்தால் இவர்கள் நடுங்குகின்றனர். இவர்கள் எதிர்க்கட்சியில் இருக்கும்போது, அமெரிக்கா, இஸ்ரேலுக்கும் எதிராகப் பல போராட்டங்களை நடத்தியிருந்தார்கள். ஆனால் ஆட்சிக்கு வந்த பின்னர், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் செயலைக் கண்டிப்பதற்கு அச்சப்படுகின்றனர்.

எனவே இந்த நாட்டில் வாழுகின்ற முஸ்லிம் மக்களின் உணர்வுகளை புரிந்து, அமெரிக்காவின் இந்தப் படுகொலையை அரசாங்கம் கண்டிக்கவேண்டும்-என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர்களை வழிப்படுத்தல்; அதிபர்களுக்குச் செயலமர்வு

கிளிநொச்சி, மார்ச் 7
மாணவர்களுக்கு உடல் ரீதியான தண்டனைகளை விடுத்து, நேர்மறையாக அவர்களை எவ்வாறு வழிப் படுத்த முடியும் என்பது தொடர்பில் பாடசாலை அதிபர் களுக்குத் தெளிவுபடுத்தும் செயலமர்வு, கிளிநொச்சி மாவட்டச் செயலக திறன்விருத்தி மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் ஏற்பாட்டில், கிளிநொச்சி மாவட்டச் செயலக உதவி மாவட்டச் செயலர் எச்.சத்தியஜீவிதா தலைமையில் நடைபெற்ற செயலமர்வில், வளவா ளர்களாக உளநல மருத்துவர் எஸ்.சிவதாஸ், சட்டத் தரணி தற்பரன்,தேசிய சிறுவர் அபிவிருத்தி அதிகார சபையின் நிகழ்ச்சிப்பணிப்பாளர் ரோகன ரணசிங்க உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளின் அதி பர்கள் இதில் பங்கேற்றனர். (க-113)

## சட்டக் கல்லூரியில் சாதித்த பிரியங்கா

யாழ்ப்பாணம், மார்ச் 7
யாழ்.மாவட்ட தீவகத்தைச் சேர்ந்த இளம்பிறையன் பிரி யங்கா, இலங்கைச் சட்டக் கல்லூரியில் சிறப்புப் பரிசில் களைப் பெற்றுச் சாதித்துள் ளார். கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற பரிசளிப்பு விழா வில், இவருக்கு இரண்டு தங் கப் பதக்கங்கள் உட்பட 9 சிறப் புப் பரிசில்கள் கிடைத்துள்ளன. குறித்த மாணவியைப் பலர் பாராட்டியுள்ளனர். (ச-66)



தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பங்களுக்கு தென்னம் பிள்ளைகள் சாவகச்சேரி சிவன் கனவில் வீதியில் உள்ள தென் மராட்சிக் கலைமன்றத்தின் கலாசார மண்டபத்தில் வைத்து அண்மை யில் வழங்கப்பட்டன. பன்னாட்டு லயன்ஸ் கழகங்களின் 306 டி 12 மாவட்டக் கழகங்களின் ஏற்பாட்டில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஊடாக அவை கையளிக்கப்பட்டன. (ச-9)



தென்மராட்சி பிரதேச கோவிற் குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவு முதியோர் ஒன்றுகூடல் கச்சாய் வீதி ஸ்ரீமுருகன் சன சமூக நிலையில் முன்றலில் அண்மையில் இடம்பெற்றது. பிரிவு கிராம அலுவலர் ச. ஞான சேந்தன் தலைமையில் நடை பெற்ற முதியோர் ஒன்றுகூடல் நிகழ்வில் பிரிவைச் சேர்ந்த முதிய வர்கள் பங்குபற்றியிருந்தனர். முதியோர்களுக்கிடையில் விளையாட்டுப்போட்டிகள் நடத் தப்பட்டு பரிசில்களும் வழங்கப் பட்டன. (ச-9)



தென்மராட்சிப் பிரதேசத்தில் போதைப் பொருளைத் தடுப்பதற்கான வாரத்தை முன் னிட்டு பிரதேச செயலர் எவ்.சி.சத்தியசோதி தலைமையில் சாவகச்சேரி நகரம் மற்றும் கோவிற்குடியிருப்புப் பிரிவுகளில் அண்மை யில் விழிப்புணர்வுத் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. (ச-9)




# செம்பொன் வாய்க்கால் மயானம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7
கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்தை அபிவிருத்தி செய்வதற் கான முதற்கட்டப் பணிகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆரம்பிக் கப்பட்டுள்ளன.
முதற்கட்டமாக மயான முகப்பு வளை வுக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு வலி காமம் வடக்குப் பிரதேசசபையின் தவி சாளர் சோமசுந்தரம் சுகிர்தன் தலைமை யில் இடம்பெற்றது. இதன்போது வலி காமம் வடக்குப் பிரதேசசபையின் செயலாளர் சி.சிவானந்தன், வலி காமம் வடக்குப் பிரதேசசபை உறுப் பினர்கள்,பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-66)

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்தின் 2025ஆம் ஆண்டின் அபிவிருத்தித் திட் டத்தின் ஊடாக கோவில்வயல் கிராமத்தின் கடற்றொழில் வாழ்வாதாரத்தை மேம்படுத்து வதற்காக 20 இலட்சம் ரூபா பெறுமதியான இயந்திரத்துடனான இரண்டு படகுகள் வழங்கப்பட்டுள்ளன. (ச-9)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 16 . 03 . 1962

இறப்பு 05 . 03 . 2026

## கந்தையா குகபரன்

காரைநகர் வேதரடைப்பை பிறப்பிடமாகவும், பாடசாலை வீதி, பண்டாரிகுளம் வவுனியாவை வதிவிடமாகவும், பத்தர்கேணி காரைநகரை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட கந்தையா குகபரன் அவர்கள் கடந்த (05.03.2026) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா (முன்னாள் வர்த்தகர், தங்கோட்டுவ (N.A.K)) - சுந்தரம்மா தம்பதியரின் இளைய புதல்வனும், காலஞ்சென்ற தெய்வநாயகம்பிள்ளை - தவமணி தம்பதியரின் மருமகனும், சரஸ்வதி அவர்களின் அன்புக் கணவரும், தர்சிகா, காலஞ்சென்ற கஜானன், தனுஷன், கீர்த்தனா ஆகியோரின் அன்புத் தந்தையும், மனோன்மணி, காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் மற்றும் கங்காதேவி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரரும், காலஞ்சென்ற பொன்னம்பலம் (நமசிவாயம்), நாகேஸ்வரி, கனகலிங்கம், குணரட்ணம், பொன்னம்பலம், சண்முகரத்தினம், நகுலேஸ்வரன், நாகேஸ்வரி மற்றும் மீனாம்பிகை ஆகியோரின் மைத்துனருமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08-03-2026) ஞாயிற்றுக்கிழமை காலை 07.00 மணியளவில் காரைநகர் பத்தர்கேணியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறுக் கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
**077 487 3989**

(CR/47183) J-1

# மரண அறிவித்தல்





தோற்றம் 06 . 05 . 2002

மறைவு 01 . 03 . 2026

## சண்முகேஸ்வரன் நிதுர்சன்

(உரிமையாளர் - S&S New Outfit)

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சண்முகேஸ்வரன் நிதுர்சன் அவர்கள் கடந்த 01.03.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று (கொழும்பில்) அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகேஸ்வரன் மற்றும் சுசீலாதேவி தம்பதியரின் அன்பு மகனும், நிதர்சன் (பிரான்ஸ்) அவர்களின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் அன்னபூரணம், காலஞ்சென்ற சுப்பிரமணியம் சுந்தரேஸ்வரி ஆகியோரின் அன்புப் பேரனும், உருத்திரசிகாமணி - அமிர்தநாயகி, பிரபாகரன் விஜயகலா, இராஜேஸ்வரி - குகானந்தன், ரேணுகேஸ்வரி -முத்துராசா, கோமளேஸ்வரி - பிலேந்திரன் ஆகியோரின் மருமகனும், நளாயினிதேவி - அருளானந்தம், றஞ்சனாதேவி - செல்வராஜா, வெங்கடேஸ்வரன் - பாமினி, கணேஸ்வரன் - வேதிகா ஆகியோரின் பெறாமகனும், அனுஷாலினி - ஜெயதரன், நிஷாளினி - காசிநாதன், நிறோஜினி - பிரதீப், நிரோசன், அபிசாந், ஆரணியா, அபிராம், அஸ்வினி, இந்துயன், சுந்தரேஸ், ஸ்ரீராம், வைஷ்ணவி, ஸ்வாஹா ஆகியோரின் சகோதரனும், லஸ்சினி, ஆர்த்திகன், மகிஷா, தனுஷா, அபிலாஸ், அபிராமி, ஆகாஸ், அபிஷேக், சுந்தரிசி -சயந், பிரியந்தி - லோஷனன், சிவாத்மிகா, சுபாகி, ஹரிணி, நிகிதா ஆகியோரின் மச்சானும், பிரவின், சர்வின், அர்வின், சஸ்வின், யவீன், தர்சிகன், சஞ்சய், ஆதித்தன், அஸ்மிரா, ஆருசன், அஸ்வின், அனிகா, அஹானா, தக்ஷன், அக்ஷதா, லதுஷன், அதீதி, அக்சரண் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.03.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புதுவளவு,**
**வல்வெட்டி, வல்வெட்டித்துறை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

CS 47182) N-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 26 . 03 . 1965

மறைவு 03 . 03 . 2026

## வைத்திலிங்கம் தர்மகுலசிங்கம் (லண்டன்)

காரைநகர் பயிரிக்கூடலைப் பிறப்பிடமாகவும், லண்டன் அல்பேட்டனை (Alperton, London) வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் தர்மகுலசிங்கம் அவர்கள் கடந்த 03.03.2026 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் சுந்தரம்மா தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்ற தியாகராஜா மற்றும் சந்திரசோதி தம்பதியரின் அன்பு மருமகனும், வாசுகியின் பாசமிகு கணவரும், சரண், திவ்வியா ஆகியோரின் அன்புத் தந்தையும், தனலட்சுமி (கொழும்பு), அமரர் கனகம்மா, லோகாம்பிகை (தாவடி), அமரர் கனகசிங்கம் (MPCS காரைநகர்), அரியமலர் (சோதிமாளிகை - நீலிப்பந்தனை), தனபாலசிங்கம் (VTS கந்தானை), உருத்திரசிங்கம் (பிரான்ஸ்), அமரர் வன்னியசிங்கம் (பிரான்ஸ்), புஸ்பமலர் (சுன்னாகம்), சோதிமலர் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சத்தியராணி (கனடா), கவிதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.03.2026) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் அமைந்துள்ள Hendon Cemetery & Crematorium (Holders Hill Road, London, NW7 1NB) என்ற முகவரியில் பிற்பகல் 2.00 மணி முதல் 4.00 மணி வரை நடைபெறும்.

**மேலும் அன்னாரின் துக்க நிகழ்வு: அன்னாரின் சகோதரரான வைத்திலிங்கம் தனபாலசிங்கம் (VTS கந்தானை) அவர்களின் பெரியமணல், காரைநகர் இல்லத்தில் நடைபெறும்.**

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
**வாசுகி (மனைவி) 0044 7454019505**
VTS **பாலன் (சகோதரன்): 0777733358**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**பெரியமணல், காரைநகர், யாழ்ப்பாணம்.**

(CS 31395)A

# மரண அறிவித்தல்



தோற்றம் 11 . 08 . 1946

மறைவு 05 . 03 . 2026

## திருமதி குசேலா மகேந்திரன்

வட்டுக்கிழக்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், சங்கரத்தை, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட குசேலா மகேந்திரன் அவர்கள் கடந்த 05.03.2026 வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் மகேந்திரன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி - சுருதி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான முருகப்பர் ஆறுமுகம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான லலிதாம்பாள், கிருபாலசிங்கா மற்றும் ஜீவசிங்கா, நேசராணி, சந்திரசிங்கா, யுகசொரூபி, நோபாலசிங்கா ஆகியோரின் அன்புச் சகோதரியும், திவாகரன் (பொறியியலாளர் - ஐக்கிய அமெரிக்கா), வைத்திய கலாநிதி ரஜனி (பொது வைத்திய நிபுணர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), வைத்திய கலாநிதி சுதர்சனா (அவுஸ்திரேலியா), கிரிஜா (துறைத் தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர், பயிரியல் துறை, விவசாய பீடம், யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயும், ஜோதிகா (பொறியியலாளர், ஐக்கிய அமெரிக்கா), வைத்திய கலாநிதி ஸ்ரீகிருஷ்ணா (என்பு முறிவு சத்திரசிகிச்சை நிபுணர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), ஆரூரன் (கணக்காளர், அவுஸ்திரேலியா), நிசாந்தன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியும், அஸ்வினி, அருணன், ஸ்ரீவாசினி, ஸ்ரீவைஷ்ணவி, அருக்ஷன், அஜந்தன், ஆர்த்திகன், அக்ஷயா, ஆதித்தியன், பிரதீசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.03.2026 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**சங்கரத்தை,**
**வட்டுக்கோட்டை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**021 225 2519**

(CR 47185)A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்மசாந்திப்பிரார்த்தனை அழைப்பு

கடந்த 10.02.2026 செவ்வாய்க்கிழமை அமரத்துவம் அடைந்த
கந்தரோடை அருளானந்தப்பிள்ளையார் ஆலய ஆதீன கர்த்தாவும்
எமது குடும்பத்தலைவருமாகிய

அமரர்

**பிரம்மஸ்ரீ இ.சோமேஸ்வர சர்மா** அவர்களின்
ஆத்மா சாந்திப்பிரார்த்தனை நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.

தலைவர் : சிவஸ்ரீ ப. ஜெயக்குமாரக்குருக்கள்
இடம் : அருளானந்தப்பிள்ளையார் ஆலய மண்டபம்
காலம் : 08.03.2026 ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 11.00 மணி.

### நிகழ்வுகள்

- மங்கள விளக்கேற்றல்
- வேதபாராயணம் தேவாரபாராயணம்
- வரவேற்புரை
- தலைமையுரை
- பிரார்த்தனை உரை நிகழ்த்துபவர்கள்

- **பிரம்மஸ்ரீ ப.சிவானந்த சர்மா B.A.Hons அவர்கள்**
அமைப்பாளர், சர்வானந்தமய பீடம், அதிபர் - சிவக்ஷரகுருகுலம், இணுவில்.
- **செஞ்சொற்செல்வர் கலாநிதி திரு.ஆறு திருமுருகன் அவர்கள்**
தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.
- **திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்கள்**
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், கந்தரோடை.
- **திரு. சின்னப்பா பேரின்பநாயகம் அவர்கள்**
முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர், பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் - சுன்னாகம்

✣ நன்றியுரை

(CS 60920) N-1

தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு
அனைத்து அன்புள்ளங்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அருளானந்தப்பிள்ளையார் கோவிலடி,
கந்தரோடை,
சுன்னாகம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
29 . 12 . 1945

மறைவு
16 . 02 . 2025

கடந்த 16.02.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று
சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் கிட்னர் சுப்பையா**

அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (07.03.2026) சனிக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் கே.கே.எஸ் வீதி நாச்சிமார் கோயில் காமாட்சி மண்டபத்தில் மதிய போசன நிகழ்வு இடம்பெறவுள்ளதால் தாங்களும் வருகை தந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

T.P : 077 322 3862
(CS/60902) J-1
குடும்பத்தினர்

காங்கேசன்துறை நாகப்பட்டினம்

# பயணிகள் படகுச்சேவை நேற்று மீண்டும் ஆரம்பம்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 05.02.2026 வியாழக்கிழமை
சங்கடசதுர்த்தி திதியில் இறைபதமடைந்த
எமது குடும்பத்தலைவி

**அமரர் திருமதி நாகேந்திரன் கமலாதேவி**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 05.03.2026 வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (07.03.2026) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இறைகேணி வீதி,
நாவற்காடு,
வரணி.

குடும்பத்தினர்
(cs 60908 (N-1)

யாழ்.மார்ச் 7 பருவகால மழை மற்றும் பராமரிப்புப் பணிகளைக் கருத்திற் கொண்டு இடைநிறுத்தப் பட்டிருந்த காங்கேசன் துறை நாகப் பட்டின் இடையேயான பயணிகள் படகுச் சேவை நேற்று மீண்டும் ஆரம்பமானது.

தமிழ்நாடு நாகப்பட்டினத்திலிருந்து நேற்றுக் காலை 9.30 மணிக்கு 77 பயணிகளுடன் சிவகங்கை பயணிகள் படகானது காங்கேசன் துறை நோக்கி புறப்பட்டது. அது மதியம் 2 மணியளவில் காங்கேசன் துறை துறைமுகத்தை வந்தடைந்தது. பின்னர் காங்கேசன் துறை துறைமுகத்திலிருந்து 92 பயணிகளுடன் 3 மணிக்கு நாகப்பட்டினம் நோக்கி பயணத்தை ஆரம்பித்தது.

நான்குமாத இடைவெளியின் பின்னர் மீண்டும் இந்தச் சேவை ஆரம்பிக்கப் பட்டுள்ளது. வாரத்தில் செவ்வாய்க்கிழமை தவிர்ந்த 6 நாள்களும் இந்தச்சேவை இடம்பெறும். இருவழிக்கட்டணமாக 28 ஆயிரத்து 500 ரூபா அறவிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம27)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
07 . 04 . 1951

மறைவு
16 . 02 . 2025

**சுந்தரம் சுபத்திராதேவி**

(இளைப்பாறிய ஆசிரியை,
யா / உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்,
யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி)

அன்பான தோழமையான அம்மாவுக்கு
கிடைத்த செல்வங்கள் நாம்
அன்பையும் அறிவையும் எமக்களித்து
சுற்றம் போற்ற வாழ்ந்த எம் குல தெய்வம்
எமை விட்டு ஓர் ஆண்டு என்ன பல ஆண்டுகள் சென்றாலும்
"வார்த்தைகள் கொண்டு வர்ணிக்க முடியாத
அழகிய பொக்கிஷம் அம்மா"

தொடர்பு:
சுவிதா - 074 131 3388
சுஜன் - 077 239 7211

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதம நீதியரசர் மன்னார் வருகை

மன்னார், மார்ச் 7

மன்னார் மாவட்டத்துக்கு கடந்த செவ்வாய்க் கிழமை, உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்ட, பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன, மன்னார் நீதவான் நீதிமன்றத்துக்குச் சென்றிருந்தார். அவரை, மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா, மன்னார் மாவட்ட நீதவான் ஐ.என்.றிஸ்வான், மன்னார் மாவட்ட மேலதிக நீதவான் எம்.எம்.எப்.ஸிஹாரா மற்றும் சட்டத்தரணிகள், நீதிமன்ற உத்தியோகத்தர்கள் ஆகியோர் இணைந்து வரவேற்றனர். மன்னார் மேல் நீதிமன்றக் கட்டடத்தில், பிரதம நீதியரசர் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போது நீதிமன்றச்செயற்பாடுகள் உள்ளடங்கலாக பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன. (க-56)

## பெயர்மாற்றம்

வரணி வடக்கு வரணியில் வசிக்கும் ஹலிஸ்டன் சீமென்ஸ் ஆகிய நான் எனது பெயரை ஹலிஸ்டன் என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் ஹலிஸ்டன் என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

ஹலிஸ்டன்

## பெண் வேலையாள் தேவை

அரியாலையில் வீட்டோடு தங்கி நின்று வீட்டு வேலை செய்வதற்கும், பிள்ளை பராமரிப்பிற்கும் பெண் வேலையாள் தேவை.

தொடர்புகளுக்கு:-
077 925 1728

(CS60915) J-1

## வேலைவாய்ப்பு

யாழில் இயங்கும் சுப்பர் மார்க்கட் மற்றும் பலசரக்கு கடைக்கு கீழ் காணும் ஆட்கள் தேவை


1. Sales Assistants (Boy & Girl)
2. Computer Billing & Cashier
3. Packing
4. Driver
5. Accountant
6. Delivery Boy
7. Part Time (5.00 pm to 10.00)

யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புக்கு: 077 4195 209
077 4195 218

(CS 31395) A

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 12 . 08 . 1940

மறைவு 06 . 02 . 2026

கடந்த 06.02.2026 வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் கனகசபை இந்திரலிங்கம்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (08.03.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

கிருஷ்ணர்கோவிலடி,
கோப்பாய் மத்தி.

(cs.60924) (N -1)

குடும்பத்தினர்

## இசைப்பிரியாவின்...

மாமனாருமான கணபதிப்பிள்ளை தர்மராசா சாவகச்சேரியில் நேற்றுமுன்தினம் காலமானார்.

மூப்புக் காரணமாகவே அவர் உயிரிழந்தார் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவர் முன்னாள் தலைமை ஆசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-100)

PEOPLE'S BANK
Pride of the Nation

## கேள்விப்பத்திர அறிவித்தல்
## மக்கள் வங்கி
## சுத்திகரிப்புச் சேவைகளுக்கான கேள்விப்பத்திரம் கோரல்

மக்கள் வங்கியின் யாழ் பிராந்தியத்தைச் சேர்ந்த யாழ்/ஸ்ரான்லி வீதி. தெல்லிப்பளை. யாழ். பிரதான வீதி. ஊர்காவற்றுறை. நெல்லியடி. அச்சுவேலி. சங்கானை. சுன்னாகம். சாவகச்சேரி. வல்வெட்டித்துறை. யாழ்/பல்கலைக்கழகம். யாழ்.கன்னாதிட்டி. பருத்தித்துறை. கொடிகாமம் ஆகிய கிளைகளிலும் கொக்குவில். மானிப்பாய். மல்லாகம். காங்கேசன்துறை. உரும்பிராய். புத்தூர். பண்டத்தரிப்பு. கோப்பாய். அளவெட்டி. பலாலி. கைதடி. உடுப்பிட்டி. திருநெல்வேலி. கல்வியங்காடு. இணுவில். புலோலி. ஆகிய சேவை நிலையங்களிலும் யாழ் /பிராந்திய தலைமைக் காரியாலயத்திலும் சுத்திகரிப்புச் சேவைகளுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட சேவை வழங்குநர்களிடம் முத்திரை இடப்பட்ட விலைகள் கோரப்படுகின்றன.

மீளச் செலுத்தப்படாத ரூபா 5000/= ஐ கேள்விப்பத்திர எழுத்தாவணக் கட்டணமாக செலுத்துவதன் மூலம் 2026 பங்குனி 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப.9.00 - பி.ப.4.00 மணிவரை பின்வரும் கைச்சாத்திடுவோரிடம் கேள்விப்பத்திர ஆவணங்களை பரிசோதித்துப் பார்க்குமாறு கோருவோர் கேட்கப்படுவதோடு எக்காரணம் கொண்டும் கேள்விப் பத்திரக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குறிப்பிட்ட கிளைகள் மற்றும் சேவை நிலையங்களின் முகாமையாளர்களோடு தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு நேரத்தை ஒதுக்கி அந்தந்த கட்டட வளாகங்களை பரிசோதிக்குமாறு கோருவோர் கேட்கப்படுகின்றனர்.


2026 பங்குனி 25ஆம் திகதி புதன்கிழமை பி.ப 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு எல்லா முத்திரையிடப்பட்ட விலைக்கோரல்களும் பின்வருபவரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

**பிராந்திய முகாமையாளர்,**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்,**
**இல: 82 கன்னாதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

Fax : 021-222 2602
E-mail : jafrho@peoplesbank.lk
தொலைபேசி இல : 021-222 2601
021-222 8602

(cr.47170) (N-1)

## மரண அறிவித்தல்



தோற்றம் 25 . 11 . 1943

மறைவு 06 . 03 . 2026

### பொன்னையா தங்கராசா JP

**(ஓய்வுபெற்ற முன்னாள் பருத்தித்துறை பிரதேச சபையின் மருதங்கேணி உப அலுவலக பொறுப்பதிகாரி, சமாதான நீதவான், முன்னாள் கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர், சுண்டிக்குளம் பறவைகள் சரணாலய காப்பாளர், தற்போதைய பாலையடி ஞானவைரவர் ஆலயத்தின் தர்மகர்த்தா)**

செம்பியன்பற்று தெற்கு செம்பியன்பற்றை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா தங்கராசா அவர்கள் நேற்று (06.03.2026) வெள்ளிக்கிழமை அன்று அவரது இல்லத்தில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா செல்லமுத்து ஆகியோரின் மூத்த மகனும், நடராசா சேதுபிள்ளை அவர்களின் அன்பு மருமகனும், கமலாம்பிகை (பவானி) அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற மோகனாம்பிகை, ஜெகதாம்பிகை (பருத்தித்துறை பிரதேச சபை - உப அலுவலகம் - மருதங்கேணி), ஞானானந்தன் (கோட்டக் கல்வி அலுவலகம் - கரவெட்டி), வதனவேணி (நியூசிலாந்து), கார்த்திகா (பிரதேச செயலகம் - மருதங்கேணி), கௌசிகா (கால்நடை வைத்தியர் அலுவலகம் - கரைச்சி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், இராஜன் (சுவிஸ்), முரளிதரன் (கொழும்பு), வாசுகி (யா/கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி), கிருபாகரன் (நியூசிலாந்து), காண்டீபன் (கரைச்சி பிரதேச சபை), ஜனன் (மாவட்ட செயலகம் - கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும், செந்தூரன், நயனன், ருஷானி, தானிகா, லோஜிகன், கபின், யதிநயா, பிரவிஸ்நயா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற மயில்வாகனம், தர்மகுலசிங்கம் (லண்டன்), ஸ்ரீராமச்சந்திரன், இராஜரட்ணசிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மூத்த சகோதரரும், காலஞ்சென்ற தர்மகுலசிங்கம், பஞ்சலிங்கம் மற்றும் வன்னியசிங்கம் (ஜேர்மனி), வதனநிர்மலா, கணேசலிங்கம் (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 08.03.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக 11.00 மணியளவில் செம்பியன்பற்று இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
077 3568 529

(CS 31399)A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படகு...

யாழ்ப்பாணம் - பாலைதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா இன்று இடம்பெறவுள்ளது. அந்தோனியார் ஆலயத் திருவிழாவுக்காக முதல் நாளே நூற்றுக்கணக்கான பக்தர்கள் படகுமூலம் பாலைதீவுக்குச் செல்வது வழக்கம். இந்தமுறை திருவிழாவுக்காகவும் பக்தர்கள் நேற்றுக்காலை முதல் பாலைதீவு நோக்கிச் செல்லத் தொடங்கினர். அவ்வாறு பக்தர்களை ஏற்றிச் சென்ற படகொன்று, புறப்பட்டுச் சிலநிமிடங்களிலேயே - குருநகர் இறங்குதுறைக்குச் சமீபமாக - கடலுக்குள் கவிழ்ந்தது. இதனால் படகில் இருந்த பயணிகள் அனைவரும் கடலுக்குள் மூழ்கினர். கரையில் இருந்து மிகச் சமீபமாக உள்ள பகுதியிலேயே இந்தப் படகு கவிழ்ந்ததால், கரையில் நின்றவர்களும், கடற்படையினரும் உடனடியாகவே அவர்களை மீட்கும் பணியில் குதித்தனர். இதன்போது, யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த எம்.ஜோசப் (வயது-80), பிரான்ஸிஸ் ஸ்டீபன் (வயது-57) ஆகிய இருவரும் நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

அத்துடன், கடற்படையால் 13 பேர் மீட்கப்பட்டு, அவர்கள் முதற்கட்ட சிகிச்சையைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். நேற்று இரவு வரையான தகவலின் அடிப்படையில், அவர்களில் இருவர் அதிதீவிர சிகிச்சைக்கும், பத்துப் பேர் மருத்துவக் கண்காணிப்புக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரியவருகின்றது. விபத்துக்குள்ளான படகில் எத்தனை பேர் பயணித்தனர் என்ற சரியான விவரங்கள் இல்லாமையால், மேலும் பலர் கடலில் காணாமற் போயிருக்கலாம் என்ற அச்சம் ஏற்பட் டுள்ளது. இதனால் கடற்படையின் சுழியோடிகள் அந்தப் பகுதியில் நீண்டநேரத் தேடுதல்களை மேற்கொண்டனர். எனினும், எவரும் மீட்கப்பாதததைத் தொடர்ந்து, தேடல் பணிகள் கைவிடப்பட்டன.

(அ-ம-66-26)

## கட்டுத்துவக்கு...

படுகாயம் அடைந்துள்ள நிலையில், அவர் மல்லாவி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சட்டவிரோத வேட்டைக்காக வைத்திருந்த கட்டுத்துவக்காலேயே இந்த அசம்பாவிதம் சம்பவித்துள்ளது என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் மாங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

(அ-ம-35)

## முழுமையான...

காரணங்களைக் கண்டறியுமாறு அமைச்சர் சந்திரசேகர் உத்தரவிட்டுள்ளார்.

படகு விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தவர்களுக்குத் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துள்ள அமைச்சர் சந்திரசேகர், பாதிக்கப்பட்ட மக்களின் நிலை தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை அதிகாரிகளைத் தொடர்புகொண்டு கேட்டறிந்தார். அத்துடன், விபத்துக்குள்ளான படகு, கடற் பயணத்துக்குப் பாதுகாப்பான நிலையில் இருந்ததா?, பயணிகளின் எண்ணிக்கை விதிமுறைகளுக்கு உட்பட்டதா?, கடற் பயணத்துக்கான பாதுகாப்பு நடைமுறைகள் முறையாகப் பின்பற்றப்பட்டனவா? என்பன குறித்து விரிவாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

(அ-ம-26-100-20-66)

## 500 லீற்றர்...

கைப்பற்றப்பட்டுள்ளது. பருத்தித்துறை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க தலைமையிலான குழுவால் இந்தக் கடத்தல் முறியடிக்கப்பட்டதுடன், சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டார். மண்ணெண்ணெயைக் கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட 'பொலிரோ' ரக வாகனமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட நிலையில், தற்போது மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. சந்தேகநபரை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(அ-ம-66-100-113)

## மேலும்...

பிரேரணைக்கு ஆதரவாக 108 வாக்குகளும் எதிராக 8 வாக்குகளும் கிடைத்தன. இதையடுத்து, பொதுப்பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் 100 மேலதிக வாக்குகளால் பிரேரணை நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்.

(அ-ம-44)

## கோத்தாபயவின்...

என்பது தொடர்பான கட்டளை ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி வழங்கப்படும் என்று நீதிமன்றம் அறிவித்துள்ளது.

2011ஆம் ஆண்டு மனித உரிமைகள் தினமான டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டத்தை ஒழுங்கமைப்பதில் ஈடுபட்டிருந்த லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் காணாமல் ஆக்கப்பட்டனர். இது தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டு, மல்லாகம் நீதிமன்றத்தில் 2011ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 12ஆம் திகதி அறிக்கையிடப்பட்டது. அத்துடன், லலித் மற்றும் குகன் ஆகியோரின் உறவினர்களால் 2012ஆம் ஆண்டு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுவும் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுமீதான விசாரணையின்போது, இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட சாட்சிகளை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றுக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனையடுத்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் 2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் விசாரணைகள் ஆரம்பமாகின. கடந்த 2017ஆம் ஆண்டு மனுவின் சாட்சியாளர்கள் பட்டியலில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவின் பெயரும் இணைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணைகளின்போது, கோத்தாபய ராஜபக்ச மன்றில் தோன்றி சாட்சியமளிக்குமாறு உத்தரவிடப்பட்டது. எனினும், பாதுகாப்புக் காரணங்களுக்காக தன்னால் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து சாட்சியம் வழங்க முடியாது என்று கோத்தாபய ராஜபக்ச மறுத்து வந்தார். கடந்த டிசெம்பர் மாதம் இந்த வழக்கு விசாரிக்கப்பட்டபோது, யாழ்ப்பாணத்துக்கு வரமுடியாதெனில் அது தொடர்பில் சத்தியக் கடதாசியை வழங்குமாறு கோத்தாபய ராஜபக்ச தரப்புக்கு நீதிமன்றம் அறிவுறுத்தல் வழங்கியது. இதற்கமைய கோத்தாபய சத்தியக் கடதாசியை தாக்கல் செய்திருந்த நிலையில், இரு தரப்பையும் எழுத்துமூல சமர்ப்பணங்களை தாக்கல் செய்யுமாறும் நீதிமன்றம் கடந்த தவணையின்போது அறிவுறுத்தல் வழங்கியது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டபோது, இந்த எழுத்துமூல சமர்ப்பணங்கள் தொடர்பான கட்டளை ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி வழங்கப்படும் என்று நீதிமன்றம் தெரிவித்துள்ளது. லலித், குகன் தரப்பினரின் சார்பில் சட்டத்தரணிகளான எஸ்.கே.புரந்திரன், லக்சன் ஆகியோரும், கோத்தாபயவின் தரப்பில் சட்டத்தரணி சுரங்க பெரேராவும் முன்னிலையாகினர்.

(அ-ம-26)

## இஸ்ரேலுக்கு...

படைக்கு எதிராகவும் நேற்றுப் பெரும் போராட்டம் இடம்பெற்றுள்ளது.

இந்தப் போராட்டத்தில், இலங்கைக்கான ஈரானியத் தூதுவர், அரசியற் தலைவர்கள், நூற்றுக் கணக்கான பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

ஈரானிலும், காஸாவிலும் இஸ்ரேல் மேற்கொள்ளும் தாக்குதல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினார்கள்.

(அ-ம)

## அடக்குமுறைகளை...

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

டித்வா புயலின்போது நாட்டில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட அவசரகாலச் சட்டத்தை அரசாங்கம் மேலும் நீடித்துள்ளது. இந்த முடிவுக்கு எதிராக, நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்தன. இதன்போதே, அடக்குமுறைகளை ஏவுவதற்கே அவசரகாலச்சட்டம் நீடிக்கப்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல சுட்டிக்காட்டினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

டித்வா பேரிடர் காலத்தில் நாட்டில் அவசரகாலச்சட்டம் அமுலுக்கு வந்தது. அந்தக் காலப்பகுதியில் இந்தச் சட்டத்துக்குத் தேவையிருந்தது. எனவே, அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு எதிராக நாங்கள் குரல்கொடுக்கவில்லை. ஆனால், அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கு தற்போது எந்தவொரு தேவைப்பாடும் இல்லை. எனவே, இந்தச் சட்ட அமுலாக்கம் உடனடியாகக் கைவிடப்பட வேண்டும்.

அரசாங்கத்துக்கு எதிரான எதிர்ப்பு அலையை ஒடுக்குவதற்காகவே இப்படியான ஜனநாயக விரோதச் செயல் இடம்பெறுகின்றது. அவசரகாலச் சட்டத்தின் மூலம் மக்களின் எதிர்ப்புக் குரல்களை அடக்கி ஒடுக்குவதற்கு அரசாங்கம் முற்படக்கூடாது - என்றார்.

(அ-ம-44)

## காணி...

மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பது தொடர்பான விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே, வடக்கு மாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் காணி விடுவிப்புத் தொடர்பில் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படைத் தலைமையகம் அகற்றப்படவுள்ளது என்று சில வாரங்களுக்கு முன்னர் வதந்தி பரப்பப்பட்டது. இத்தகைய தகவல்களைப் பரப்பி, நாட்டில் மீண்டும் அமைதியற்ற நிலையை உருவாக்குவதற்கு சதி செய்தனர். குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவே இத்தகைய பொய்யான தகவல்களைப் பரப்புகின்றனர். எனவே பொதுமக்கள் மிகவும் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும்.

வடக்கு, கிழக்கு, தெற்கு என நாட்டின் எந்த பகுதியாக இருந்தாலும், உரிய மீளாய்வின் பின்னரே காணிகள் விடுவிக்கப்படுகின்றன. தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கப்பட்டே அனைத்து நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன - என்றார்.

(அ-ம-44)

## சென்.ஜோன்ஸ்...

கிரிக்கெட் ஆட்டத்தில், சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்துள்ளது.

119ஆவது 'வடக்கின் போர்' கிரிக்கெட் ஆட்டம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானிக்க, முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சற்குணராஜா வினுக்சன் 22 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்குக் களமிறங்கிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 95 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஏ.அபிஷேக் 23 ஓட்டங்களைப் பெற்றார்.

24 ஓட்டங்கள் முன்னிலையுடன் பதிலுக்குக் களமிறங்கிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 223 ஓட்டங்களைப் பெற்றது. உதயனன் அபிஜோய்ஷாந்த் அபாரமாக விளையாடி சதம் குவித்தார். அவர் 105 பந்துகளில் 14 பவுண்டரிகள், 3 சிக்சர்கள் உள்ளடங்கலாக 121 ஓட்டங்களைப் பெற்றார்.

248 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, நேற்றைய ஆட்டநேர முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 120 ஓட்டங்களையே பெற்றுள்ளது. ஆட்டத்தின் இறுதிநாள் இன்றாகும்.

(அ-ம)

## சாந்திபுரத்தில்...

தாலிக்கொடி உட்பட 15 பவுண் நகைகள், 4 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பணம் என்பன திருடப்பட்டிருந்த நிலையில், இது தொடர்பில் மன்னார் பொலிஸாரிடம் நேற்றுமுன்தினம் முறைப்பாடு வழங்கப்பட்டது. இந்த முறைப்பாட்டுக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணைகளின் அடிப்படையிலேயே, நான்கு பெண்கள் கைது செய்யப்பட்டனர். திருடப்பட்ட அனைத்து நகைகளும் மீட்கப்பட்ட நிலையில், அவர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகளையும் மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-ம-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் வளப்பற்றாக்குறைகளுடன் வன்னிப் பிராந்தியப் பாடசாலைகள்



## ரவிகரன் எம்.பி. சுட்டிக்காட்டு

**முல்லைத்தீவு, மார்ச் 7**

**வன்னி மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான பாடசாலைகளில் வளப்பற்றாக்குறை, போதியளவு இடவசதி இன்மை மற்றும் கட்டி முடிக்கப்படாத கட்டடங்கள் என்ற பல காரணங்கள் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளைப் பாதிக்கின்றன என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டினார்.**

நாடாளுமன்றில் அண்மையில் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாநேரத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், பரிசோதனைகளுக்கும், தகவல் தொழில்நுட்பச் செயன்முறைகளுக்குமான செயற்பாட்டறைகள் வன்னியில் பெரும்பாலான பாடசாலைகளில் போதுமானதாக இல்லை.

ஒரு வகுப்பறையை விடவும் மிகவும் சிறிய அளவிலான கட்டடங்களுள் இயங்கும் ஆய்வுகூடங்களும் வன்னி மாவட்ட பாடசாலைகளில் உள்ளன. பரிசோதனைகளுக்கும் தகவல் தொழில்நுட்பப் பயிற்சிகளுக்கும் போதுமான வளங்கள் இல்லாதிருப்பதோடு, செயற்பாடுகளுக்கான இடவசதியும் இல்லாதிருப்பது வெற்றிகரமான கல்விமறுசீரமைப்பு நடைமுறைப்படுத்தலுக்குச் சவாலாகும். வள நிரப்பலில்குமுச்செயற்பாடுகளின் அடிப்படையிலேனும், மாணவர்கள் தகவல் தொழில்நுட்பச் செயன்முறை அறிவைப் பெற்றுக்கொள்வதற்குப் போதுமான கணினிகள் இந்த வருடத்திலாவது பாடசாலைகளுக்கு வழங்கப்படுமா?- என்றார். இதற்குப் பதிலளித்த பிரதமர் ஹரிணி அமரசூரிய, பாடசாலை வளங்களில் காணப்படுகின்ற குறைபாடுகளை நிரப்புவது தான் கல்விமறுசீரமைப்பின் முக்கிய மான இலக்காகும்.

இதற்காகவே பாடசாலைகளின் உட்கட்டமைப்புக்களைச் சீர்செய்வதற்கு ஒதுக்கீடுகளைச் செய்துள்ளோம். குறிப்பாக ஆய்வுகூடங்கள், தொழில்நுட்பக் கருவிகள் தொடர்பாகக் குறிப்பிட்டளவான நிதியை ஒதுக்கியுள்ளோம். இரண்டாம் தரப் பாடசாலைகளில் போதுமான வசதிகளற்ற பாடசாலைகளை ஏற்கனவே நாம் கண்டறிந்துள்ளோம். அவ்வாறான இரண்டாம் தரப் பாடசாலைகளுக்கு ஆகக்குறைந்தது ஒரு திறன் வகுப்பறையாவது ஒதுக்கியாக வேண்டும். அத்தோடு சிறந்ததொரு தொழில்நுட்ப வலைத்தளத் தொடர்பைக் கொடுக்கவேண்டும் என்பதிலும் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம்.

ஒரேதடவையில் இந்த வேலைகளைச் செய்துமுடிக்கமுடியாது- என்றார். (க-246)

# சனீஸ்வர மாற்ற பரிகார யாக பூசை

கிளிநொச்சி, மார்ச் 7

பளை இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் கோவிலில் சனீஸ்வர மாற்ற பரிகார யாக பூசை இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கோவிலில் இடம்பெறவுள்ளது.

அஷ்டமத்து சனி, ஏழரைச் சனி மற்றும் கண்டக சனிதோசம் உள்ளவர்கள் பரிகார யாகத்தில் கலந்துகொள்ளுமாறு கோவில் பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ச- 9)

**காணி விற்பனைக்கு**

பளை புலோப்பளையில்
20 பரப்புக்காணி உடனடியாக
விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: **076 564 7848**

(CS 60823) N-1

# அறுவடை இயந்திரங்களுக்கு தடையின்றி டீசல் விநியோகம்

## விவசாயிகள் ஏமாறவேண்டாமென மன்னார் மாவட்டச்செயலர் தெரிவிப்பு

மன்னார், மார்ச் 7

மன்னார் மாவட்டத்தில் தற்போது போதிய அளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளதால், விவசாயிகள் தங்களது நெல் அறுவடையை இடைத்தரகர்களிடம் குறைந்த விலைக்கு விற்கவேண்டாம் என மாவட்டச் செயலர் க. கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- மத்திய கிழக்குப் பதற்றத்தால் கடந்த மூன்று நாள் களாக நிலவிய எரிபொருள் தட்டுப்பாடு தற்போது நீங்கியுள்ளது.

டீசல், பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவை தற்போது மாவட்டத்தில் தாராளமாகக் கையிருப்பில் உள்ளன. அறுவடை இயந்திரங்களுக்குத் தேவையான எரிபொருளைத் தடையின்றி வழங்குமாறு அனைத்து எரிபொருள் நிலைய உரிமையாளர்களுக்கும் உத்தர விடப்பட்டுள்ளது.

எனவே அவசரப்பட்டு நெல்லைக் குறைந்த விலைக்கு இடைத்தரகர்களிடம் விற்கவேண்டாம்.

அத்துடன் கடற்றொழிலுக்குத் தேவையான மண்ணெண்ணெய் விநியோகம் எவ்விதத் தடையுமின்றி நடைபெறுகிறது. தனியார் மற்றும் அரச பேருந்துகளுக்குத் தேவையான எரிபொருள் தாராளமாக வழங்கப்பட்டு வருகின்றது - என்றார். (ச-56)

**புதிய கிளை**
**புது கடை திறப்பு விழா**

**மலிவு விலையில் கோழிகள் முட்டைகள்**
**07.03.2026 முதல்**
**வசாவிளான் பாடசாலை முன்பாக**
**பலாலி வீதியில் கடை திறந்துள்ளேன்**

| இறைச்சி | | |
|---|---|---|
| | 1 கிலோ புறொயிலர் | 1100/= |
| | 1 கிலோ கல்பேட்ஸ் | 1250/= |
| | 1 கிலோ பேரன்ஸ் | 1350/= |

**இவை அனைத்தும் இன்று முதல் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளமுடியும்.**

**உரிமையாளர்: தோ.கலைதாசன்**
**நியூ சிற்றி பாம்**
**நியூ சிற்றி போழிக்கடை**

(CS 31394)A

# மகளிர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 7

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் 28ஆவது ஆண்டு பன்னாட்டு மகளிர் தின நிகழ்வுகள் நாளை பிற்பகல் 1.30 மணிக்கு சாவகச்சேரி டச்சு வீதி ஸ்ரீ ஐங்கரன் மணிமண்டபத்தில் சங்கத் தலைவி திருமதி ம. கீர்த்திநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சங்க அங்கத்தவர்கள் மற்றும் பாடசாலை மாணவர் களிடையே நடத்தப்பட்ட பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு இதன்போது பரிசில் வழங்கல் இடம்பெறும்.

நிகழ்வில் சங்க அங்கத்தவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறும் என சங்கச் செயலாளர் தெரிவித்தார். (ச-9)

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் மானிப்பாய் நகரத்தில்**
**26 நிலபரப்புக் காணி விற்பனைக்கு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- மானிப்பாய் நகரம் சோதி வேம்படி வித்தியாலயம் அருகில் வேம்டி வீதியில்.
- யாழ் - காரைநகர் பிரதான வீதி 300 m தூரத்தில்
- வங்கிகள், பாடசாலைகள் பிரதான வர்த்தக நிலையங்கள் 400m தூரத்தில்.
- நல்ல சூழல் நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை, முன் காணி துண்டு 32,00000 (முப்பத்தி இரண்டு இலட்சம்)
- நடு துண்டு ஒரு பரப்பின் விலை 28,00000 (இருபத்தி எட்டு இலட்சம்)
- பின் துண்டு ஒரு பரப்பின் விலை 26,00000 (இருபத்தி ஆறு இலட்சம்)
- பார்வையிடும் நேரம் - காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

**தொடர்பு:- 074 029 2338**
**076 990 3039**
**077 288 0152**

(CS 31398) A



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.03.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org